முருகப்பெருமான் துணை

**மகான் கணம்புல்ல நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.02.2023, ஞாயிற்றுக்கிழமை

1. மாதவ சக்தியே அரங்கா
மகத்துவம் உலகினில் படைக்க
மாதருமம் புரிந்திடும் தேசிகா
மண்ணுலகில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது கலை திங்கள்
குறைவிலா இருபான்நவ திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 29 ம் நாள் 12.02.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு கணம்புல்ல நாயனார் யானும்
3. யானும் உலகநலம் பெற உரைப்பேன்
உயர்தருமம் செய்து அரங்கன்
ஞானவரமும் மக்களுக்கு
நம்பிக்கையூட்டி தந்துவர
4. வருகவே இன்னும் அலட்சியம்
வையகத்தார் கொண்டிருக்கா
வருகிறேன் என சரணடைவு
வருமுலகில் பிரணவக் குடில் நோக்கி
5. நோக்கி உலகோர் கொண்டுவர
நிலவுலகில் நல்ல மாற்றமாக
ஊக்கமுடன் அவரவர் கண்டு
உண்மைபட வாழும் காலமே
6. காலமே சகல சூட்சுமங்களும்
கண்டுத் தேறி அரங்கனால்
பலமான ஞானவான்களாக மாறி
பாருலகையே மாற்றும் சக்திகளாக
7. ஆகவே தேறுவர் இனிதே
ஆற்றல்பட குருவருள் கொண்டு
வகைபட ஞானிகள் ஆகவே
வல்லமை அடைந்தும் உயர்வர்
8. உயரவே எங்கும் அரங்கன்
உண்மை அவதார பலம்
தயவாக மக்களிடை கொண்டு
தரணியில் சென்று தனித்துவம்
9. தனித்துவம் அரங்கன் செயலாக
தரணியோர் முடித்து நிற்பர்
இனியும் காலம் கடத்தா
இணைந்து அரங்கன் சீடர்கள்

10. சீடர்கள் சத்திய ஜோதி அமைப்பை
சேவைக்கான களமாக மாற்றி
தடையற செயல்பாடு துவக்க
தண்டாயுதன் வெளிப்பாடு பெருகி

11. பெருகியே எங்கும் வரவேற்பு
பேராதரவாக மக்களிடை பரவி
முருகப்பெருமான் தலைமை ஏற்ற
முழுமைதரும் ஞான ஆட்சிவர நேரும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—